தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 049/ந/2021
நாள். 27.12.2021

திருமதி.P. கீதா,
விழுப்புரம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
விழுப்புரம் நகராட்சி. – எதிர்மனுதாரர்

விழுப்புரம் மாவட்டம், எண்.15, நடேசன் நகர், சரஸ்வதி அவின்யூ, பூந்தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.P.கீதா அவர்களின் நாள்குறிப்பிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.07.2021 அன்று பெறப்பட்டு, 049/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், எண்.15, நடேசன் நகர், சரஸ்வதி அவின்யூ, பூந்தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.P.கீதா என்பவர் தமது மனுவில், நான் நகரமைப்பு மற்றும் நகராட்சி கட்டிட விதிகளின் கீழ் குடியிருப்பு கட்டி குடியிருந்து வருகிறேன். மேலும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரியினை நிலுவையின்றி செலுத்தி வருகிறேன். நான் விழுப்புரம் மாவட்டம், பூந்தோட்டம் கிராமம், சர்வே எண்.121/1 மற்றும் 123ல் சரஸ்வதி அவின்யூ என்று பிரிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் மனை எண்.15-ஐ கிரயத்திற்கு வாங்கி குடியிருந்து வருகிறேன். மேற்கண்ட சரஸ்வதி அவின்யூ என்ற மனைப்பிரிவிற்கு தெற்கு வடக்காக 20 அடி சாலை உள்ளது. இந்தச் சாலையின் தென்பகுதி முடிவிற்கு கிழக்காக (East facing of South end road) எனது வீடு உள்ளது. உதவி இயக்குநர் நகர ஊரமைப்பு உதவி இயக்குநரகத்தால்

மேற்காணும் சாலை SPF செய்யப்படவில்லை என தெரியவருகிறது. இந்நிலையில் சாலை பதிவேட்டின் படி மதிப்பீடு தயார் செய்யாமல் தார் சாலைப் பணி முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை.

மேற்காணும் சாலையின் தென்பகுதியில் (South end of Road) நகராட்சியால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகளான தார் சாலை போடுதல் போன்ற பணிகள் நகராட்சி பொறியாளர், உதவிப் பொறியாளர் பணி மேற்பார்வையாளர் மற்றும் பணி ஆய்வாளர் போன்றவர்களால் முழுமையாக மதிப்பீடு தயார் செய்யாமல் அரை குறையாக சாலைப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. நகராட்சியின் பொறியியல் பிரிவைச் சார்ந்த பணியாளர்களால் மேற்காணும் சாலையின் தென்பகுதியில் தார்சாலை பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதால், அச்சாலையின் தென்பகுதியை திரு.சந்திரபாலன் என்பவர் தனிநபர் ஒருவருக்கு விற்பதற்கு விலைப்பேசி வருகிறார்.

3. மேற்காணும் சாலையின் தென்பகுதியை திரு.சந்திரபாலன் என்ற தனிநபர் விற்பதற்கு நகராட்சி பொறியியல் பிரிவைச் சார்ந்த ஊழியர்களால் அப்பகுதியை முழுவதற்கும் மதிப்பீடு தயார் செய்யாமலும், முழுமையாக தார் சாலை இடாமலும், அலட்சியமாக இருப்பது, அவரின் செயலுக்கு உடந்தையாகவும், உறுதுணையாகவும் இருந்து செயல்பட்டு வருவதாக தெரியவருகிறது.

4. எனவே, மேற்காணும் சரஸ்வதி அவின்யூ என்ற மனைப்பிரிவில் வடக்கு தெற்காக உள்ள சாலையின் தென் பகுதி முழுவதும் தார் சாலைப் பணியை சாலைப்பதிவேட்டின்படி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கும்படியும் மேற்காணும் சாலையில் தார் சாலை பணியை இதுவரை முழுமையாக மேற்கொள்ளப்படாத நகராட்சி பொறியியல் பிரிவைச் சார்ந்த பணியாளர்கள் மீது ஒழுங்க நடவடிக்கை (Disciplinary Proceedings) மேற்கொள்ளும்படியும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் மனு குறித்து அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 12.07.2021 ல் விழுப்புரம் நகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார். விழுப்புரம் நகராட்சி ஆணையர் தமது அறிக்கையில், விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.26-ல் சரஸ்வதி அவென்யூ மனை பிரிவு அமைந்துள்ளது. அம்மனை பிரிவானது திரு.சந்திரபாலன் என்பவரால் அமைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மனுதாரர் திருமதி.P.கீதா என்பவர் மனை எண்.15-ல் குடியிருந்து வருகிறார். மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு தொடர்பாக கள ஆய்வு செய்யப்பட்டத்தில் வடக்கு தெற்காக 20 அடி அகல சாலை அமைந்துள்ளது. இப்பகுதியில் உள்ள சாலைகளுக்கு தார்சாலை அமைக்கும் பொருட்டு 14வது நிதிக்குழு மானியம் திட்டம் 2017-18 ன் கீழ் 510 x 4 மீட்டர் நீளத்திற்கு திட்ட மதிப்பீடு ரூ.21.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் கள தன்மைக்கு ஏற்ப தார்சாலையானது 535 x 4 மீட்டர் நீளத்திற்கு (சுமார் 25.00 x 4.00 மீட்டர் கூடுதலாக) ஜூலை 2019-ம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது.

6. மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள சாலையின் தென் பகுதி சாலையானது, பணி நடைபெறும் போது 2019-ம் ஆண்டு பயன்பாட்டில் இல்லை என்பதால் 10.50 மீட்டர் நீளத்திற்கு

சாலை அமைக்கப்படவில்லை. மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள விடுபட்ட சாலையானது திரு.சந்திரபாலன் என்ற தனி நபரால் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்படவில்லை என தெரிய வருகிறது. மேலும் மனுதாரர் சாலை அமைக்க கோரும் பகுதியில் புதியதாக சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மதிப்பீடு தயார் செய்து, மன்ற அனுமதி பெற்று, நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப சாலை அமைத்து தரப்படும் என்று தெரிவித்துள்ளார்.

7) மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் ஆகியோரை 23.11.2021 அன்று பிற்பகல் 12.30 மணி அளவில் நடைபெறும் நேரடி விசாரணையில் ஆஜராகி விளக்கம் அளிக்க 16.11.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரரான திருமதி.P.கீதா மற்றும் விழுப்புரம் நகராட்சி ஆணையாளரும் மறு தேதி கேட்டுக் கொண்டதற்கிணங்க 15.12.2021 அன்று முற்பகல் 11.30 மணிக்கு நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.12.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 15.12.2021 நாளிட்ட நேரடி விசாரணையிலும் மனுதாரரான திருமதி.P.கீதா கலந்து கொள்ளவில்லை.

8) விழுப்புரம் நகராட்சி ஆணையாளர் 15.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண்.26-ல் உள்ள சரஸ்வதி அவென்யூவில் குடியிருந்து வரும் மேற்கண்ட மனுதாரர் அளித்துள்ள புகாரில் கண்டுள்ள இடத்தை கள ஆய்வு செய்ததில் அப்பகுதியில் 535 x 4 மீட்டர் நீளத்திற்கு தார் சாலை ஏற்கனவே கடந்த 2019 ஆம் ஆண்டில் சாலை போடப்பட்டுள்ளது. மேற்கண்ட சாலையை அமைக்கும்போது மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் பயன்பாட்டில் இல்லாததால் அங்கு சாலை அமைக்கப்படவில்லை. மனுதாரர் குறிப்பிட்ட இடத்தில் புதிதாக சாலை அமைத்திட மதிப்பீடு தயார் செய்து, மன்ற அனுமதி பெற்று சாலை அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சரஸ்வதி அவென்யூவில் ஆக்கிரமிப்பு இடங்களை அளவீடு (Survey) செய்து, அதனை மீட்டு பொது பயன்பாட்டிற்கு கொண்டுவர விழுப்புரம் நகராட்சியால் உரிய நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை ஏற்கனவே சமர்ப்பித்துள்ளேன் என்பதனையும் தெரிவித்துகொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் மனு தொடர்பாக விழுப்புரம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் ஆணையாளரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தெரிவித்துள்ள மனை பிரிவில் வடக்கு தெற்காக உள்ள சாலையின் தென் பகுதி முழுவதும் பணி நடைபெறும் போது 2019 ஆம் ஆண்டு பயன்பாட்டில் இல்லை என்பதால் 10.50 மீட்டர் நீளத்திற்கு தார் சாலை அமைக்கப்படவில்லை என்பதும் விடுபட்ட சாலை பகுதியை திரு.சந்திரபாலன் என்ற தனி நபரால் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என்பதும் ஆணையரின் அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது. மனுதாரர் சாலை அமைக்க கோரும் பகுதியில் புதியதாக சாலை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதி பெற்று நகராட்சியின் நிதி நிலைமைக்கேற்ப சாலை அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்துள்ள ஆணையரின் அறிக்கையினை ஏற்று சரஸ்வதி அவின்யூ

மனை பிரிவில் வடக்கு தெற்காக உள்ள விடுபட்ட சாலை பகுதியில் தார் சாலையை அமைத்திடவும் மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சரஸ்வதி அவின்யூவில் தனியார் ஆக்கிரமிப்பு ஏதேனும் உள்ளதா என்பதை கண்டறிந்து ஆக்கிரமிப்பு இடங்களை அளவீடு செய்து அதனை மீட்டு பொது பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், உரிய சட்டவிதிகளின்படி நடவடிக்கையினை மேற்கொள்ளவும் விழுப்புரம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.P.கீதா,
எண்.15, நடேசன் தெரு,
சரஸ்வதி அவின்யூ, பூந்தோட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

2) ஆணையாளர்,
விழுப்புரம் நகராட்சி, விழுப்புரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.,

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

30/12/21

செயலாளர்

30/12/21